III.—GOVERNMENT BILLS—*cont.*

(2) The Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965.

The Hon. Sri R. VENKATARAMAN : Sir, I beg leave to introduce the Madras General Sales Tax (Second Amendment) Bill, **1965**.

Mr. SPEAKER : The question is—

"That leave be granted for the introduction of the Madras General Sales Tax (Second Amendment) Bill, 1965."

The motion was put and carried and leave was granted.

The Hon. Sri R. VENKATARAMAN : Sri, I introduce the Bill.

Mr. SPEAKER : The Bill is introduced.

V.—THE MADRAS STATE ELECTRICITY BOARD BUDGET FOR 1965–66 DISCUSSION—*cont.*

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத்தலைவர் அவர்களே, 1965–66-ம் ஆண்டுக்கான மின்சாரத் துறை நிதிநிலை அறிக்கையும், 1964–65-ம் ஆண்டுக்கான துணை நிதிநிலை அறிக்கையும் இந்த அவையின் முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன. அவைபற்றிய சில கருத்துக்களை நான் அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இந்த மாநில அரசாங்கத்தின் கீழிருக்கிற நிறுவனங்களில் மிகப் பெரிய நிறுவனமாக ரூ. 227 கோடி மூலதனத்தோடு நடைபெறுகிற நிறுவனம் இந்த நிறுவனமேயாகும். மின்சாரத் துறை எந்த அளவிற்கு ஆர்வத்தோடும் அக்கறையோடும் பணியாற்றி வருகிறது என்பதை இந்த அவையில் உள்ள உறுப்பினர் பலரும் தெளிவுபட சுட்டிக் காட்டினார்கள். மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கிற வகையில் இந்த மாநிலத்தில் மின்சாரத் தேவை ஓரளவிற்கு நிறைவேறறப்படுகிற அளவிற்கு அதில் மிக அக்கறையோடும், ஆர்வத்தோடும் இந்தத் துறை ஈடுபட்டிருக்கிறது, அதில் மின்சாரக் குழுத் தலைவர் அவர்களும், தொழில் துறை அமைச்சர் அவர்களும் ஆர்வம் காட்டுகிறார்கள் என்பதைப்பற்றி இந்த மன்ற உறுப்பினர்கள் அனைவரும் பாராட்டுரை தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், இந்த மாநிலம் அதிகமான அளவிற்கு மின்சாரத்தைப் பெருக்கி வருகிறது என்பதுபற்றி ஓரளவு மகிழ்ச்சி கொண்டாலும் மாநிலத்தின் தேவையை நிறைவேற்றுகிற அளவிற்கு அது அமைந்திருக்கிறதா என்றால் அமையவில்லை. கனம் தொழில் அமைச்சர் அவர்கள் அன்று இதுபற்றிக் கூறுகிறபோதுகூட மற்ற மாநிலங்களைவிட நாம் மின்சாரத்தை அதிகமாகப் பெருக்குவதில் முன்னேறியிருக்கிறோம் என்ற அளவோடு திருப்திப்படாமல் நம் தேவையை எந்தளவிற்கு நிறைவேற்றியிருக்கிறோம் என்பதைப் பொறுத்துத்தான் மின்சார உற்பத்தியை நாம் கவனிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம் என்று எடுத்துக் கூறினார்கள். நாட்டின் எதிர்கால வளர்ச்சி வேளாண்மைத் துறையைப் பொறுத்தும்,